# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C

1. District மாவட்டம்: Kanchipuram | PS காவல்நிலையம்: Vigilance & Anti Corruption | Year ஆண்டு: 2020 | FIR No முு.த.அ. எண்: 01/AC/2020/Kmm | Date நாள்: 06.08.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as Amended in 2018 | Sections பிரிவுகள்: u/s 7
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : -

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 05.08.2020 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 1730 hrs. | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 06.08.2020 | Time : நேரம் 15.30 hrs.
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 06.08.2020 | Time : நேரம் 15.30 hrs & 16.30 hrs.

Seen 1. Karthik 7/8/20

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ Written.

Seen 2. [signature] 7/8/20

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 60 km South East
   Beat Number : முறைக் காவல் எண் - | (b) Address : முகவரி -
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. R. Srinivasan | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Rajamanikkam
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 56 years. | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் TV. Service Engineer | (g) Address : முகவரி Flat No 102. Door No. 5 Mariyammal Nagar 4th Street Kavankarai, Chennai 66

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tmt. K. Kalyani, Special Officer/BDO (VP) Madurantkagam Panchayat Union Chengalpattu District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   Preliminary Enquiry Conducted on His Petition.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-2T.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded Rs 5000/- as bribe from the Complainant

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G. Annadurai Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Kanchipuram on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. சீனிவாசன் 6/8/2020

G. A. [signature] 6/8/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 07.08.2020 at 09.40 hrs.

Name: பெயர் G. ANNADURAI
Rank: நிலை Inspector of police. No. எண்
V&AC, Kanchipuram

**Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2020/KM, U/s** 7 of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 **continues . . .)**

பணிந்து அனுப்பப்படுகிறது

இன்று 06.08.2020-ந் தேதி மாலை சுமார் 15.30 மணியளவில் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் ஆகிய நான் ஆஜரில் இருந்தபோது, சென்னை-66, கதவு எண்.5 4வது தெரு, காவாங்கரை, மாரியம்மாள் நகரைச் சேர்ந்த R.சீனிவாசன், வ-56, த/பெ. இராஜமாணிக்கம் என்பவரின் 06.08.2020 நாளிட்ட புகார் மனுவினை காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் பெற்று அதன் மீது ஒப்பமிட்டு உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு என்னிடம் அளிக்கப்பட்ட மனுவின் மீது, உயர் அதிகாரியின் அனுமதியுடன் முதற்கட்ட விசாரணையை ரகசியமாக மேற்கொண்டேன். அந்த மனுவின் சாரம்சம் பின்வருமாறு. அனுப்புனர் R.சீனிவாசன், வ-56, த/பெ. இராஜமாணிக்கம், பிளாட் எண்.102, கதவு எண்.5, மாரியம்மாள் நகர், 4-வது தெரு, காவாங்கரை, சென்னை-66, பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, காஞ்சிபுரம், ஐயா, நான் என் குடும்பத்தாருடன் மேற்குறிப்பிட்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் B.Sc கணிதம் படித்துவிட்டு TV Servie Engineer –ஆக வேலை பார்த்து வருகிறேன். என் தங்கை திருமதி.லீலாவதி க/பெ. கோதண்டராமன் என்பவர் செங்கற்பட்டு அண்ணா தெருவில் வசித்து வருகிறார். மேலும் திருமதி.கோகிலாவாணி க/பெ. கெவின், சேலவாயில், சென்னை என்பவர் எனது குடும்ப நண்பராவார். என் தங்கை லீலாவதி மற்றும் கோகிலவாணி ஆகிய இருவருக்கும் மதுராந்தகம் தாலுக்காவிற்குட்பட்ட பாக்கம் கிராமம் சர்வே எண். 351/2 மற்றும் 351/3-ல் சுமார் 1200 சதுரடி கொண்ட அங்கீகரிக்கப்படாத பிளாட்களில், லீலாவதி என்பவருக்கு பிளாட் எண்.32, 33-ம் மற்றும் கோகிலாவாணி அவர்களுக்கு பிளாட் எண்.13-யும் சுமார் 8 வருடத்திற்கு முன்பு நான் உடனிருந்து அவர்கள் பெயரில் வாங்கி கொடுத்தேன். மேற்படி பிளாட்டுகளுக்கு அவர்கள் பெயரில் பட்டா இல்லாததால், அவர்களால் அடிக்கடி சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு சென்று பார்க்க முடியாத காரணத்தால், என் தங்கை லீலாவதி மற்றும் கோகிலாவாணி ஆகிய இருவரும் என்னை மேற்படி பட்டா பெறுவது சம்மந்தமான வேலைகளை பார்த்துக்கொள்ளுமாறு தெரிவித்தார்கள். அதன் பேரில், நான் அவர்கள் பெயரில் தனித்தனியாக பட்டா பெறுவதற்காக, கடந்த பிப்ரவரி 2020-ல் மதுராந்தகம் தாலுக்கா ஆபிசில் உள்ள இ-சேவை மையம் சென்று விசாரித்தபோது, அங்கிருந்த நபர் ஒருவர், மேற்படி பிளாட்டுகள் அங்கீகரிக்கப்படாத இடம் என்பதால்,

**Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2020/KM, U/s** 7 of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 **continues . . .)**

மதுராந்தகம் வட்டார வளர்ச்சி அலுவகத்திற்கு சென்று, மனை வரன்முறைபடுத்துதலுக்கான சான்று பெற்றபின்னர்தான் மனுவை ஆன்லைனில் பதிவு செய்யவேண்டும் என்று தெரிவித்தார். பின்னர் நான் மதுராந்தகம் வட்டார வளர்ச்சி அலுவலகம் சென்று அவர்கள் பெயரில் பட்டா மாற்றுவதற்கு சான்று வாங்கிவரவேண்டும் என்று இ-சேவை மையத்தில் தெரிவித்த தகவலை அவர்களிடம் தெரிவித்தேன். அப்போது, அலுவலகத்தில் இருந்த ஒரு நபர், மேற்கண்ட 3 மனைகளுக்கு அரசிற்கு செலுத்தவேண்டிய தொகைகளான, வரன்முறைபடுத்துதலுக்கான கட்டணம், வளர்ச்சிக்கட்டணம் மற்றும் கொடிநாள் கட்டணம் போன்றவற்றை செலுத்தும்படி தெரிவித்தார்கள். அதன்படி நான் 3 பிளாட்டுகளுக்கும் தனித்தனியாக பணத்தை கட்டினேன். அதற்கான அத்தாட்சி கடிதத்தை BDO அலுவலகத்தில் கொடுத்தார்கள். அதன்பின் கொரோனா தாக்கம் அதிகம் ஆனதால், நான் செல்லவில்லை. பின்னர் கடந்த 04.08.2020-ந்தேதி மதுராந்தகம் வட்டார வளர்ச்சி அலுவலகம் சென்று திருமதி.கல்யாணி, BDO (கி.ஊ) மற்றும் தனி அலுவலர் அவர்களை பார்த்து, அவர்கள் ஏற்கெனவே வழங்கிய பணம் செலுத்தியதற்கான அத்தாட்சி கடிதத்தை காண்பித்து, என் தங்கை மற்றும் கோகிலாவாணி ஆகியோர்களது மனை வரன்முறைப்படுத்துதல் சான்று குறித்து கேட்டபோது, அவர் மேற்படி கோப்புகளை பார்த்துவிட்டு, சம்மந்தப்பட்ட பிளாட்டுகளின் புளூபிரிண்ட்டினை கொண்டு வந்து கொடுக்குமாறு கேட்டார். அதன்படி நான் நேற்று 05.08.2020-ந்தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் திருமதி. கல்யாணி, BDO அவர்களை சந்தித்து, புளூபிரிண்ட்டை கொடுத்தேன். அதை அவர் வாங்கி வைத்துக்கொண்டு, ஒவ்வொரு பிளாட்டிற்கும் தலா ரூ.2,000/-ம் என 3 பிளாட்டுகளுக்கு மொத்தம் ரூ.6,000/-ம் பணம் கொடுக்குமாறு கேட்டார். அதற்கு நான் கொரோனாவில் யாருமே வேலைக்கு போகமுடியாததால் அவ்வளவு பணம் தருவது மிகக்கடினம் என்று கூறி, எங்கள் குடும்ப சூழ்நிலையை எடுத்து கூறினேன். அதனை கேட்டு, திருமதி.கல்யாணி அவர்கள் ரூ.6,000/-த்திலிருந்து ரூ.1,000/-ஐ குறைத்து முடிவாக ரூ.5,000/-ம் எனக்கு கொடுத்தால், வேலையை முடித்து தருகிறேன் என்று கண்டிப்புடன் கூறினார். எனக்கு, மதுராந்தகம் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.கல்யாணி அவர்களுக்கு பிளாட் வரன்முறைபடுத்துதல் சான்று பெறுவதற்கு லஞ்சமாக பணம் ரூ.5,000/-ம் கொடுக்க விருப்பம் இல்லை. இதுசம்மந்தமாக என் தங்கை மற்றும் கோகிலாவாணியிடமும் கூறினேன். அதற்கு அவர்கள் நாம் அரசிற்கு செலுத்தவேண்டிய அனைத்து கட்டணங்களை கட்டிய பின்பும், BDO அவர்கள் இவ்வளவு கறாராக லஞ்சப்பணம் கேட்கிறாரா என்றும், அவர்களுக்கும் லஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லாததால் BDO மீது சட்டப்படி

**Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.01/AC/2020/KM, U/s** 7 of the Prevention of Corruption Act 1988 as Amended in 2018 **continues** . . .)

நடவடிக்கை மேற்கொள்ள புகார் மனு கொடுக்குமாறு என்னிடம் தெரிவித்தனர். அதன்படி நான், இன்று 06.08.2020-ந்தேதி மாலை சுமார் 03.30 மணிக்கு திருமதி.கல்யாணி, BDO, மதுராந்தகம் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டி தங்களிடம் இந்த புகார் மனுவை கொடுக்கின்றேன். என் மனுவின்மீது எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுப்பேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம் xxx R.சீனிவாசன்) Dt:06-8-2020.

Honoured Sir,

Received the above complaint after endorsement of DSP V&AC,KPM on 06.08.2020 at 15.30 hrs and after getting proper permission from the higher officers on this complaint, a preliminary Enquiry was conducted in a discreet manner. Based on the outcome of the Preliminary Enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tmt.K.Kalyani, Special Officer / BDO (VP), Maduranthagam Panchayat Union, Chengalpattu District. Hence, I registered a case in Kanchipuram V&AC, Cr.No.1/AC/2020/KM u/s 7 of the Prevention of Corruption Act 1988 as Amendment in 2018 on 06.08.2020 at 16.30 hrs. The original FIR along with complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Chengalpattu. Copies send to Officers concerned and took-up further action.

6/8/2020.

(G. ANNADURAI)